இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 08-01-2025

# சிறுபிள்ளைத்தனமானது சண்டித்தனமானது!

“போ.. போ... நான் சாப்பிட மாட்டேன்” என்று குழந்தைகள் அடம் பிடிப்பதை போன்ற செயலைத்தான் தமிழ்நாடு ஆளுநர் செய்திருக்கிறார். நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் இப்படி ஒரு சண்டித்தனம் இதுவரை எந்த ஆளுநரும் செய்ததில்லை என்பது மாதிரியான செயலைச் செய்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியையும் மக்களையும் கொச்சைப்படுத்தி இருக்கிறார். **தி.மு.க. ஆட்சியை அவமானப்படுத்துவதாக நினைத்து தன்னைத் தானே அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.**

ஆண்டின் தொடக்கத்தில் சட்டமன்றத்தில் ஆளுநர் உரையாற்ற வேண்டும் என்பது ஒரு மரபு. அரசால் தயாரித்து வழங்கப்படும் உரையை, அப்படியே வாசிக்க வேண்டும் என்பதுதான் விதி. ஆனால் தான் தோன்றித்தனமாக அதை மீறி வருகிறார் ஆர்.என்.ரவி.

2021 ஆம் ஆண்டு ஆர்.என்.ரவி ஆளுநராக வந்தார். 2022 ஆம் ஆண்டு தனது முதல் உரையை முழுமையாக வாசித்தார். எதையும் மாற்றவில்லை.

2023 ஆம் ஆண்டு உரையில் இருந்த பெரியார், அம்பேத்கர், கலைஞர் ஆகிய சில பெயர்களை விட்டுவிட்டு வாசித்தார். சுயமரியாதை, மதச்சார்பின்மை, மகளிர் முன்னேற்றம் ஆகிய சொற்களையும் விட்டுவிட்டு வாசித்தார். அரசு கொடுத்த உரையில் இருப்பது முழுமையாக அவைக் குறிப்பில் ஏறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்ததும், **தேசிய கீதம் பாடப்பட்டது. தேசிய கீதத்தை அவமதிக்கும் வகையில் அவையில் இருந்து வெளியேறினார் ஆளுநர்.**

2024 ஆம் ஆண்டு தனது உரையை வாசிக்காமல் அமர்ந்து இருந்தார். பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள், ஆளுநர் உரையின் தமிழ் வடிவத்தை வாசித்தார்கள். ‘தமிழ்த்தாய் வாழ்த்து தான் பாடுகிறீர்கள், தேசிய கீதம் பாடவில்லை’ என்று சாக்குப் போக்குச் சொன்னார் ஆளுநர் ரவி.

**2025 ஆம் ஆண்டிலும் இதே சாக்குப் போக்கைச் சொன்னார் ரவி. பேரவை வளாகத்துக்கு வந்தார். போய்விட்டார். தனது உரையை வாசிக்கவில்லை. வாசிக்கப் போவதில்லை என்று முடிவெடுத்தவர் எதற்காக வந்து ‘சீன்’ போட வேண்டும்? கான்வாய் போட்டு, டிராபிக்கை நிறுத்தி எதற்காக அலைய வேண்டும்? கிண்டியிலேயே குந்தி இருக்க வேண்டியது தானே?!**

தமிழ்நாடு பிடிக்காவிட்டால் போக வேண்டியதுதானே? தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள டெல்லிக்கு எதற்காக படையெடுக்க வேண்டும்? பீகாருக்குப் போங்கள்! இல்லாவிட்டால் ‘கமலாலயம்’ போக வேண்டியதுதானே? அங்கும் ஒரு பதவி காலியாகப் போகிறதே? சட்டையைக் கழற்றி சாட்டை அடித்துக் கொண்டு பொழுதைப் போக்கலாமாம். தினந்தோறும் டிவியில் வரலாம். யூடியூப் பார்க்கலாம். கமெண்டுகள் படித்து காலத்தைக் கழிக்கலாமே? கவர்னராக இருந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை எதற்காகக் காவு வாங்க வேண்டும்?

**மொத்தமே 3 நிமிடங்கள் அவையில் இருந்துள்ளார் ஆளுநர். அவருக்கு தமிழ்நாட்டில் இருக்கும் ஒரே வேலை, ஆண்டுக்கு ஒரு நாள் அவைக்கு வந்து, எழுதிக் கொடுத்த உரையை வாசிப்பது மட்டும்தான். அதைக் கூடச் செய்ய மாட்டேன் என்பவருக்கு தரப்படும் சம்பளம், தெண்டம் அல்லவா?**

பேரவை கூடும் போது தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்கும். பேரவை முடியும் போது தேசியகீதம் ஒலிக்கும். இதுதான் காலம் காலமாக இருக்கும் நடைமுறை. அதை மாற்றி, தொடக்கத்தில் தேசியகீதம் பாட வேண்டும் என்று அடம்பிடிப்பது வேண்டுமென்றே செய்யும் காரியம் அல்லவா?

**தேசிய கீதத்துக்காக நெஞ்சை வெடைக்கும் திருவாளர் தேசியம், கடந்த ஆண்டு தேசிய கீதம் பாடப்பட்ட போது எதற்காக மரியாதை செலுத்தாமல் ஓடினார்? தேசிய கீதத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்தது சட்டப்படி குற்றம் அல்லவா?**

தமிழ்நாடு அரசாங்கத்தால் எழுதி அனுப்பிய உரையைப் பார்த்து, ‘ஐயோ தமிழ்நாடு இவ்வளவு முன்னேறிவிட்டதே’ என்று நினைத்து தொண்டை அடைக்கிறது ஆளுநர் ரவிக்கு. வயிறு எரிகிறது ஆளுநர் ரவிக்கு. நெஞ்சு அடைக்கிறது ஆளுநர் ரவிக்கு. அதனால்தான் வாசிக்க மறுக்கிறார். ‘தேசிய கீதம் பாடவில்லை’ என்று இட்டுக்கட்டி பழிபோடுகிறார். தமிழ்நாட்டின் வளத்தையும் நலத்தையும் காணப் பொறுக்காத அவர் எதற்காக தமிழ்நாட்டில் இருக்க வேண்டும்?

**“தனது அரசியல் சட்டக் கடமைகளைச் செய்யவே மனமில்லாதவர் அந்தப் பதவியில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அனைவர் மனதிலும் எழும் கேள்வி” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பதுதான் உண்மை. ‘பிடிக்காவிட்டால் போக வேண்டியது தானே’ என்றுதான் பொதுமக்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.**

ஆளுநர் மாளிகையைக் காலி செய்து விட்டு சனாதன ஆராய்ச்சி செய்யலாம். வர்ணாசிரம வகுப்பு எடுக்கலாம். இங்கிலாந்து மீது படையெடுப்பு நடத்தலாம். கால்டுவெல் சமாதியைத் தோண்டலாம். திருக்குறளை தீட்டுப்படுத்தலாம். வள்ளலாரை வறுத்தெடுக்கலாம். அம்பேத்கரை அசிங்கப்படுத்தலாம். அவரை யார் கேட்கப் போகிறார்கள்? நாமும் ஏன் தலையங்கம் எழுதப் போகிறோம்?

**இந்த மாதிரியான ஆட்களை எல்லாம் அவர்கள் வகிக்கும் பொறுப்புகளுக்காக சகித்துத் தொலைக்க வேண்டியுள்ளது.**

●●

### பொங்கல் பண்டிகை: யு.ஜி.சி. – நெட்

# தேர்வுகளை வேறொரு தேதிக்கு மாற்றி அமைத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய கல்வி அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜன. 8 -**

**தமிழ்நாட்டில் தைப்பொங்கல் கொண்டாடும் ஜனவரி 14 உட்பட்ட நாட்களில் தேசிய தேர்வு முகமையால் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள யுஜிசி-நெட் தேர்வுகளை வேறொரு நாளுக்கு மாற்றியமைக்க கோரிக்கை விடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் கொண்டாடும் ஜனவரி 13 முதல் 16ஆம் நாள் வரை யுஜிசி-நெட் தேர்வுகளை நடத்திட தேசியத் தேர்வு முகமையால் அறிவிக்கை கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அதுகுறித்து ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களின் உடனடி கவனத்திற்கு கொண்டு வந்து அத்தேர்வுகளை வேறொரு நாளில் மாற்றியமைக்க கோரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்த ஆண்டு தமிழ்நாட்டின் மிக முக்கியமான பண்டிகையான பொங்கல் பண்டிகை ஜனவரி 14 அன்று கொண்டாடப்படுகிறது என்றும் இந்தப் பண்டிகை தமிழ்நாட்டின் மிக முக்கியமான பண்டிகை என்றும், தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினராலும் அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது என்றும் தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 23.12.2024 அன்று ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டிய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பண்டிகை ஜனவரி 13 முதல் ஜனவரி 16 வரை நான்கு நாட்கள் கொண்டாடப்படுவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**பொங்கல் பண்டிகை அரசு விடுமுறை!**

பொங்கல் பண்டிகையை அனைத்து தமிழ்ச் சமூகத்தினரும் நான்கு நாட்கள் உற்சாகமாக கொண்டாடுவர் என்றும் எனவே, இந்தப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2025 ஜனவரி 14 முதல் 17 வரை அரசு விடுமுறை நாட்களாக தமிழ்நாடு அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் அவர்கள் தனதுகடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.

**தேர்வர்கள் பாதிப்புக்குள்ளாவர்!**

தமிழ்நாட்டின் அறுவடைத் திருவிழாவாக கொண்டாடப்படும் பொங்கல், ஒரு பண்டிகையாக மட்டுமல்லாது ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைக் காட்டுவதாகவும், இந்தப் பொங்கல் பண்டிகையைப் போலவே, ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் மகர சங்கராந்தி பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே, திட்டமிட்டபடி பொங்கல் விடுமுறையில் யுஜிசி-நெட் தேர்வை நடத்தினால், ஏராளமான தேர்வர்கள் சிரமத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் இதே காரணத்திற்காக ஜனவரி 2025இல் நடைபெறவிருந்த பட்டயக் கணக்காளர்கள் தேர்வு ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, யுஜிசிநெட் தேர்வுகள் மற்றும் பிற தேர்வுகளை வேறொரு பொருத்தமான நாட்களில் மாற்றியமைக்க தேவை உள்ளது என்று தாம் கருதுவதாகவும், அறுவடைத் திருவிழா கொண்டாடப்படும் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் மாணவர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் தேர்வுகளுக்கு எளிதில் வர இயலும் என்றும் முந்தைய ஆண்டுகளில் பொங்கல் பண்டிகை காலங்களில் தேசிய தேர்வு முகமை யுஜிசி-நெட் தேர்வை நடத்தவில்லை என்று தரவுகள் காட்டுகிறது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தேர்வு தேதியை மாற்றி அமைத்திடுக!**

ஆகவே, இத்தகைய சூழ்நிலையில், யுஜிசி-நெட் தேர்வுகள் மற்றும் பிற தேர்வுகளை ஜனவரி 13 முதல் 16 வரையிலான நாட்களில் நடத்துவதைத் தவிர்த்து பொருத்தமான வேறு நாட்களுக்கு மாற்றியமைக்குமாறும் இதுகுறித்து ஒன்றிய கல்வி அமைச்சர் தலையிட்டு தமிழ்நாட்டில் மற்றும் பல மாநிலங்களில் அறுவடைத் திருவிழா கொண்டாடப்படும் காலங்களில் யுஜிசி-நெட் தேர்வுகள் நடத்தும் திட்டத்தை மாற்றியமைக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

### சட்டப்பேரவையில் விரும்பத்தகாத நிகழ்வுகளை கடைப்பிடிக்கும்

# ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு இன்னும் ஆளுநர் பொறுப்பில் வைத்திருப்பது விசித்திரமானது!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

**சென்னை, ஜன. 8 -**

**நடப்பாண்டின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர்.என். ரவி புறக்கணித்தார் என்றும் “சட்டப்பேரவையில் விரும்பத்தகாத நிகழ்வுகளை கடைப்பிடிக்கும் ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு இன்னும் ஆளுநர் பொறுப்பில் வைத்திருப்பது விசித்திரமானது” என்றும் ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.**

நடப்பாண்டின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி புறக்கணித்தார். இதனை சுட்டிக்காட்டி ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தீட்டியுள்ள தலையங்கத்தில், தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் ஆளுநர் ஆற்றும் உரை, ஆண்டுதோறும் விரும்பத்தகாத நிகழ்வாக மாறி வருவது வருத்தமளிப்பதாக கூறப்பட்டுள்ளது.

தேசியக் கீதத்தை காரணம் காட்டி, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தாண்டும் ஆளுநர் சர்ச்சையை உருவாக்கியுள்ளதாக வேதனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரைக்கு முன் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், முடிவில் தேசிய கீதமும் பாடப்படுவது தான் சட்டப்பேரவையின் மரபு என ஆளுநர் அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டும்,

முந்தைய ஆண்டுகளை போல் இந்த ஆண்டும் ஆளுநரின் செயல்பாட்டில் அப்பட்டமாக அரசியல் வெளிப்பட்டுள்ளதாக ‘தி இந்து’ ஆங்கில நாளேடு குற்றம் சாட்டியுள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் குழப்பத்தை ஏற்படுத்த ஆளுநர்கள் தங்கள் பதவியைப் பயன்படுத்தக் கூடாது என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியும்,

மாநில அரசின் சகிப்புத்தன்மையை தொடர்ந்து, சீண்டும் ஆளுநர் ஆர்.என்.ரவியை, அந்தப் பதவியில் ஒன்றிய அரசு வைத்திருப்பது விசித்திரமானது என ‘தி இந்து’ ஆங்கில நாளேடு விமர்சித்துள்ளது.

‘தி இந்து’ தலையங்கம் வருமாறு:-


THE HINDU

**Contrived grievance**

*Creating an unsavoury row has become an annual habit with the T.N. Governor*

It is regrettable that the customary address to the Tamil Nadu Legislative Assembly by the Governor in the beginning of a new year's session is turning into an unsavoury event year after year. For the third consecutive year, Governor R.N. Ravi's penchant for raking up a controversy has come to the fore. He left the Assembly without reading out the address, claiming that the national anthem and the Constitution of India had been insulted because the anthem was not played prior to the delivery of his speech. The State government maintains that the practice in the Assembly was to play the State's invocation to Tamil before the address and the national anthem at the end of the Governor's speech and that this had been conveyed to the Governor's office. As in the previous years, Mr. Ravi has to bear much of the blame for the flagrant politicisation of the event. If he had such prior knowledge about the practice followed in the Assembly, his grievance comes across as a ruse to create a controversy and avoid performing his constitutional duty of propounding the government's policy statement on the floor of the House. In 2023, Mr.

தமிழக சட்டப் பேரவையில் புதிய ஆண்டுக் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் ஆளுநர் உரை நிகழ்வின்போது, ஆண்டுதோறும் விரும்பத்தகாத நிகழ்வாக மாறி வருவது வருந்தத்தக்கது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஆளுநர் ஆர்.என்.ரவி சர்ச்சையை கிளப்புவதில் ஆர்வம் காட்டி வருகிறார். தனது உரைக்கு முன்னதாக தேசிய கீதம் இசைக்கப்படாததால், இந்திய அரசியலமைப்புச் சட்டமும், தேசிய கீதமும் அவமதிக்கப்பட்டதாகக் கூறி, பேரவையில் இருந்து உரையாற்றாமல் வெளியேறினார்.

ஆளுநர் உரையின் முடிவில் தேசிய கீதம் இசைக்கப்படுவது குறித்து ஆளுநர் அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டதும் சட்டசபையில் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் இசைப்பது தான் வழக்கம் என்று மாநில அரசு கூறுகிறது.

2023 ஆம் ஆண்டில், ரவி, மாநில அரசு தயாரித்த அறிக்கையின் சில பகுதிகளைத் தவிர்த்து விட்டார், இதில் ‘திராவிட மாடல்’ ஆட்சி பற்றிய குறிப்பும் மற்றும் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமைக்கு சில பாராட்டுக்கள் குறித்தும் இருந்தன. கடந்த ஆண்டு, அவர் அறிக்கையை படிக்க இயலாமையை வெளிப்படுத்தினார், அதில் “தவறான உண்மைகள்” உள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அண்மைக்காலமாக ஆளுநர் பதவி மாற்றங்களும், புதிய நியமனங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. கேரள அரசில் முள்ளாக இருந்த ஆளுநர் ஆரிப் முகமது கான், பீகாருக்கு மாற்றப்பட்டதும், மணிப்பூர் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் ராஜ்பவனில் புதிய பொறுப்பாளர்களைப் பெற்றிருப்பதும் குறிப் பிடத்தக்கது. இருப்பினும், ரவி அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டில் நீண்ட காலத்திற்கு இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாக உள்ளது. அவர் மாற்றப்படாமல் இருக்கிறார். 2019ல் நாகாலாந்தில் பதவியேற்ற அவர் இரு மாநிலங்களில் ஆளுநராக ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

2021ல் தமிழகத்திற்கு மாற்றப்பட்டார், ஆனால் அவர் அடிக்கடி அரசியல் சர்ச்சையில் சிக்கி வருகிறார்.

ஒருபுறம் சட்டத்தை நிலை நிறுத்துவது, மறுபுறம் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதை தாமதப்படுத்துகிறார். சமீபத்திய உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் அது குறித்த பார்வையின்படி, ஆளுநர்கள் தங்கள் பதவியைப் பயன்படுத்தி, ஒன்றியத்தில் உள்ள ஆட்சியில் உள்ளவர்களின் அரசியல் எதிரிகளின் தலைமையிலான ஆட்சியைக் குறை மதிப்பிற்கு உட்படுத்த எந்த வழியும் இருக்கக் கூடாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியுடன் ரவியின் தொடர்ச்சியான கருத்து வேறுபாடுகளின் அளவைக் கருத்தில் கொண்டு, மாநில அரசின் சகிப்புத்தன்மையின் வரம்புகளை சோதிப்பதே அதன் நோக்கமாக இல்லாவிட்டால், ஒன்றிய அரசு அவரை ஆளுநராக வைத்திருப்பது உண்மையில் விசித்திரமானது மற்றும் கேள்விக்குரியது.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



அண்ணல் அம்பேத்கர் விருதுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பதையொட்டி நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், அமைச்சர் முனைவர் க.பொன்முடியை விழுப்புரத்தில் அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார். அமைச்சர் சி.வெ.கணேசன், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோரும் வாழ்த்தினார்கள். வி.சி.க. மாவட்டச் செயலாளர் பொன்னிவளவன், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.